விட்டதா ? தொடங்கிய பணி குறிப்பாக எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப் பெற வேண்டும் அல்லது முடிக்கப்படும் என்ற நிலையைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தகவல் தெரிவிக்க வேண்டுமென்ருல், கனம் சபாநாயகர் அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : சில எம்.எல்.-ஏக்கள் அமைச்சர் களிடமும் மற்றவர்களிடமும் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன் படுத்தி, அதிகாரிகளை யெல்லாம் மிரட்டும்படியான ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அதிகாரிகள் சுதந்திரமாகச் செயல்படுகிற வகையில், அதற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில், இந்த அரசாங்கம் அதிகாரிகளுக்கெல்லாம் சில உத்தரவுகளைப் பிறப்பிக் குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எம்மாதிரி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் விரும்புகிருர் என்று எனக்கு தெரியவேண்டும். எம்மாதிரி தலையீடு இருக்கிறது என்ற விவரங் கள் என்னிடம் இல்லை. ஆனல், அதிகாரிகள் தலையீட்டுக்கு இடங் கொடுக்க மாட்டார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த விதிகள் தயாரிக்கப்படும்போது மாநில மட்டத்திற்கு மட்டும் பொருந்தக்கூடியதாகத் தயாரிக்கப் படுமா ? அல்லது ஜில்லா மட்டத்திற்கும் பொருந்தக்கூடியதாக விதிகள் தயாரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களும் கனம் தலைவர் அவர்களும் கவனிப்பது இங்குள்ள சட்ட மன்றங் களை ஒட்டியது ; சட்ட மன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியவர்களை ஒட்டியது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-க்களாக இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு வாய்ப்பு, ஒரு சலுகை இருப்பதும், எதிர்க் கட்சிகளில் உள்ள எம்.எல்.ஏ.-க்களுக்கு அவ்வளவு இல்லை என்பதும் கனம் முதல் அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்கு வந்திருக்கலாம் ; இல்லையென்ருல், இப் போதாவது நான் கொண்டு வருகிறேன். அதையாவது நிவர்த்தி செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் என்னிடம் தகவல் இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டு விவாதத்திற்கு வருகிறபோது அதையெல்லாம் சொல்லலாம்.

Speeches arranged by Dravida Kazhagam

* 4 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the series of discourses by name "இராமாயணச் சொற்பொழிவுகள்" arranged and conducted by the Madras City Units of Dravida Kazhagam in

[1st August 1966

various parts of Madras City in which speeches were made, offending public morals and the religious feelings of the members of the Hindu Community; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

... (*b*) The legal aspects are under examination.

திரு. வை. சங்கரன் : இந்தக் கூட்டங்களெல்லாம் பிராமணர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் ஏற்பாடு செய்யப் படுவதும், மேற்படி கூட்டங்களில் ஈ.வே.ரா. பெரியார் அவர்கள் கலந்துகொண்டு, ஹிந்து மதத்தவர்கள் கும்பிடும்படியான இராம பிரான் போன்ற தெய்வத்தைக் குடிகாரன் என்றும், கெட்ட நடத்தை உள்ளவன் என்றும் பழித்தும், பிராம்மண சமூகத்தை இழித்தும் பேசியதான ரிப்போர்ட் சர்க்காருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியென்றால், அதன் மேல் என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது வரையிலும் சர்க்கா ருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதைப் பொறுத்த வரையிலும் சொல்லுகிறேன். தெரிவிக்கப்படுகிற கருத்துக்கள் நமக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால், இப்பொழுதிருக்கும் சட்டப் படி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்று பார்க்கும் போது இப்பொழுதுள்ள சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியாது. நமக்குப் பிடிக்காவிட்டாலும் 'சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியாது.

திரு. சா. கணேசன் : இந்தப் பிரசாரத்திலே ஜாதி அல்லது மதக் கருத்து வேறுபாடுகள் இருந்தால், அதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்குரிய மார்க்கங்கள் தெரியாமல் இருக்க லாம். இந்தப் பிரசாரத்தின் மூலமாக மிகப் பலருடைய மத நம்பிக்கை அல்லது தெய்வ நம்பிக்கை அல்லது மத உணர்வு அக்கிரமமாகவும் அநியாயமாகவும் குத்தப்பட்டு, மனத்தைப் புண்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதனாலே, இதன் மூலமாகப் பலத்த அபாயங்கள் அல்லது கலகங்கள் ஏற்படும் என்ற நிலையிலே அதைத் தடை செய்வது கூட அரசாங்கத்தால் முடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் தடை செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால், அதற்குப் போதிய காரணங்கள் இருக்கவேண்டும். போதிய காரணங்கள் இருந்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : இப்படிப்பட்ட வர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டம் இடம் தரவில்லை என்றாலும் கூட, சட்டத்தை மாற்றியாவது இவர்கள் மீது கடுமை யான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

1st August 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டத்தை மாற்றுவது அவ்வளவு சுலபமல்ல. சில சட்டங்கள், மத்திய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள். சில இங்கேயே நிறைவேற்றப் படுகின்றன. ஏதோ ஒரு அவசியத்தை யொட்டி புதிய சட்டம் வேண்டும் என்ருல், வேறு பல காரணங்களினுல் அந்த சட்டத்திற்கு அவசியம் இல்லே, அநாவசியமாக மக்களுடைய உரிமையைப் பாதிக்கும் என்று சொல்லக்கூடியவர்களும் இருக்கிருர்கள்.

திரு. வை. சங்கரன் : இந்தப் பிரசங்கத்தைக் குறித்து போலீஸ் ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வந்திருக்கலாம். உண்மையிலேயே, இந்து மதத்தினரின் சமய உணர்வு, மத உணர்வு புண்படுத்தப்படவில்லே என்று அமைச்சர் அவர்கள் உறுதியாகச் சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் உறுதியாகச் சொல்ல வேண்டியதில்லே. நான் அவ்வாறு சொல்லவே இல்லே. மனத்தைப் புண்படுத்தி இருக்கலாம். மனத்தைப் புண்படுத்துவது என்பது ஒன்று. ஆனுல், அதற்கு இப்போதிருக்கும் சட்டப்படி என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பது வேறு. மனது புண்படுத்தப்படுகிறது, அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்ருல், அதற்குப் போதிய சட்டம் இல்லே.

திரு. சா. கணேசன் : மிகப் பெரும்பாலோருடைய மத உணர்வைப் புண்படுத்துகிறபோது, அதைத் தடுப்பதற்குச் சட்டத்திலே இடம் இல்லே என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிருர்கள். அதைப்பற்றி அதிகமாக விமரிசனம் செய்வதற்கு எனக்கு ஆற்றல் இல்லே. ஆனுல், இதுமாதிரி பல்வேறு இடங்களில் கூட்டங்கள் போடுகிறபோது, இது மாதிரியான துவேஷ வார்த்தை வரும், அல்லது ஒருவரைப் புண்படுத்தக் கூடிய நிலே வரும் என்பதை அரசாங்கம் உணர்ந்து தடை போட்டு மிகப் பெரும்பாலான மக்களுடைய மனம் புண்படுவதைத் தவிர்ப்பதற்குரிய வகையில் அரசாங்கம் செயல்பட முடியவில்லேயென்ருல், இராம ராஜ்யம், சீதா ராஜ்யம் என்றும், காந்தியடிகள் காட்டிய வழியில் செல்லுகிருேம் என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறபோது, 'கற்பு' பற்றி அந்தப் பெரியார் பேசுவதை—சொல்ல நா கூசுகிற அளவிற்கு, அவ்வளவு கேவலமாகப் பேசுவதை—அரசாங்கம் சகித்துக் கொண்டிருப்பது நீதியா ? நியாயமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சகித்துக்கொண்டிருக்கும் விஷயம் ஒன்றும் இல்லே. இதிலே அந்தந்தச் சூழ்நிலேக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. யாருடைய மனதாவது புண்படுகிறது என்ருல், அங்கே போய்க் கேட்கிறவர்கள் ஆசையோடு கேட்கிருர்கள். இஷ்டம் இல்லாதவர்கள் ஏன் அங்கே போகிருர்கள்? எத்தனேயோ பத்திரிகைகளில் இந்தப் பிரசங்கம் வருகிறது என்பதல்ல. ஏதோ ஒரு பத்திரிகையில் வருகிறது என்ருல், அதை ஏன் படிக்கிருர்கள் ? படிக்க ஆசை உள்ளவர்கள் படிக்கிருர்கள். அவர்கள் மனம் புண்படுத்தப்படுகிறது என்று சொல்ல முடியாது. மனம் புண்படுகிறவர்கள் அத்தகைய

கூட்டங்களுக்குப் போகவேண்டியதில்லை. ஆனால், எதுவாயிருந்தாலும், எவர் ஒருவருடைய மனம் புண்படுகிறது என்றாலும், அதற்குக் காரணமாக இருப்பவர்கள் மீது, சட்டம் இடம் கொடுத்தால், சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு இந்த அரசாங்கம் எப்போதும் தயங்குகிறதில்லை.

திரு. ர. ஜீவரத்னம் : கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் ஊரில் ஒரு பாலத்தின் மீது, "பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பார்ப்பானைக் கொல்" என்று எழுதி, கீழே "தி.மு.க." என்று கையொப்பம் இடப்பட்டிருக்கிறது. அதை அழிக்கச் சர்க்கார் உத்தரவு இடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி எழுத்துக்கள் ஒரு பாலத்திலே எழுதப்பட்டிருந்தால், அந்த எழுத்துக்களை யார் எழுதியிருந்தாலும், அதை அரசாங்கம் தான் துடைக்கவேண்டும் என்றால் அந்த வட்டாரத்திலுள்ளவர்களுடைய மனத்திலே ரோஷம் இல்லையா, நியாய உணர்வு கிடையாதா என்று கேட்கிறேன். யார் வேண்டுமானாலும், அதை அழித்துவிட்டிருக்கலாம். அழிக்காதது குற்றம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், அதற்காக கனம் உறுப்பினர், அரசாங்கம் இதில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது.

மதிய உணவு

*5. கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதிய உணவுத் திட்டத்தின்கீழ், உணவு உட்கொண்ட மாணவர்களுள், கடந்த 1965-ம் ஆண்டில் மட்டும் எத்தனை இடங்களில், எத்தனை மாணவர்கள் சொறி, சிரங்கு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டனர்?

(இ) இவைகள்பற்றித் தடுப்பு முறையாக அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஒருவரும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இன்றையதினம் வந்திருக்கிற ஒரு செய்தியில் அரசாங்கத்தின் சார்பாக பெரியநாயகம் பாளையத்தில் உள்ள பள்ளிக்கூடக் குழந்தைகளின் தேக ஆரோக்கியத்தைப் பற்றி எடுத்த ஆராய்ச்சி சர்வேயில் ஏறக்குறைய 50 சத விகிதத்திற்கு மேல் ஏராளமான குழந்தைகள் நோய்நொடிகளுக்கு ஆளாகியிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது இந்த மதிய உணவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள் எத்தனை பேர் என்று கணக்குக் கொடுக்க முடியுமா?